## இந்த ஆண்டின் விழாவும் மறைமாவட்டத் திருப்பயணமும்:

நமது மறைசாட்சி தேவசகாயத்தின் ஆண்டுப் பெருவிழா திருத்தந்தையின் ஆணைப்படி அன்னாரது மறைசாட்சிய தினமான சனவரி 14 அன்று கொண்டாடப்படுகின்றது. இவ்வாண்டு அந்த விழாவானது சுழற்சி முறைப்படி மறைசாட்சியின் புனித கல்லறை விளங்கும் கோட்டாறு பேராலயத்தில் மாலை 5.30 மணிக்கு கொண்டாடப்படும். இது ஒரு மறைமாவட்ட விழா மட்டுமல்ல, மறைமாவட்டத் திருப்பயண தினமும் ஆகும். அன்று நமது அனைத்துப் பங்குகளிலிருந்தும் வாகனங்களிலோ, ஏன், கால்நடையாகக்கூட கோட்டாறுக்கு வருதல் சிறந்த பயனைத் தரும். நமது நம்பிக்கையையும், நற்செய்தி ஆர்வத்தையும் தூண்டும் திருப்பயணமாகவும் இருக்கும். எனவே இந்த மறைமாவட்டத் திருப்பயணத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

## பங்குகளில்:

பங்குகள்தோறும் இவ்விழாவினை அதற்கு முந்தின நாளாகிய 13ஆம் தேதி கொண்டாடலாம். அத்திருப்பலியில் மறைசாட்சியின் புனிதர் பட்டத் திருப்பணிக்கான மக்களின் காணிக்கைகளையும் ஆலயங்கள், சிற்றாலயங்களிலும், நிறுவனங்களிலும் சேகரித்து மறைமாவட்டப் பொருளாளருக்கு அனுப்பிடக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எல்லா ஆலயங்களிலும் புனிதர் பட்டத்திற்கான இறைவேண்டுதலை ஒவ்வொரு நாளும் திருப்பலியில் நற்கருணை அருந்தியபின் சொல்லிவர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் "இந்திய மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை" என்னும் மும்மாத இதழை அனைவரும் வாங்கி வாசித்து பயனடையவும், மறைசாட்சி பற்றிய நூல்களைப் பரவலாக்கம் செய்திடவும் வேண்டுகிறேன். மறைசாட்சி முத்திப்பேறுபெற்ற தேவசகாயத்தின் வேண்டுதலாலும், எடுத்துக்காட்டாலும் நமது வாழ்வு சிறந்திட வாழ்த்துகிறேன்.

அனைவருக்கும் புத்தாண்டு மற்றும்
பொங்கல் வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவின் மனநிலையில்

-sd-

ஆயர் நசரேன் சூசை
கோட்டாறு மறைமாவட்டம்